தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1974 மார்ச் 4.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரி மாணவர் விடுதி.

* 271—வினா : திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரிக்கு மாணவர் விடுதி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) ரூபாய் ஆறு லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பல்கலைக் கழக மான்யக் குழுவின் உதவியுடன் விடுதிக் கட்டிடம் கட்டுவதற்கு கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து வந்த கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் அரசு ஏற்பு வழங்கப்படும்.

பி.காம்., எம்.காம். பாட வகுப்புகள்.

* 272—வினா : திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலக் கல்லூரியில் பி.காம்., எம்.காம்., பட்டப் படிப்பு தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.